**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No. 926/2023**
**வழக்கு சாட்சி PW-4**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ரமேஷ் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | பரமசிவன் | தொழில் | : | கொத்தனார் |
| கிராமம் | : | திண்டிவனம் | வயது | : | 30 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of November 04th, 2025.

**(எதிரிகள் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் திண்டிவனத்தில் குடியிருந்து வருகிறேன். நான் கொத்தனார் வேலை செய்து வருகிறேன். எதிரிகளை எனக்கு தெரியும். அ.சா.1 குருசாமியை எனக்கு தெரியும். சுமார் 12 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் எங்கள் ஊர் குழந்தைகளான ரம்யா, குருசாமி, முருகன், ஹரி, அபி, காயத்ரி, சாவித்திரி ஆகியோர்கள் என்னுடைய மாமனார் முனியாண்டி வீட்டு வாசலில் மயங்கி கிடந்தார்கள். 108 ஆம்புலன்ஸிற்கு போன் போட்டு, அந்த குழந்தைகளை சங்கரன்கோவில் அரசு மருத்துவமனைக்கு எடுத்து சென்றோம். அங்கிருந்து, மேல்சிகிச்சைக்காக திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். அந்த குழந்தைகள் எதிரிகள் மிட்டாய் கொடுத்ததாகவும், பின்னர் மயங்கி விட்டதாகவும் மருத்துவமனையில் வைத்து கூறினார்கள். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :**

என்னுடைய சொந்த ஊர் திண்டிவனம். நான் எதிரிகள் குழந்தைகளுக்கு மிட்டாய் கொடுத்ததை நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். நான் குழந்தைகள் கிடந்த இடத்திற்கு வரும்போது, சாயங்காலம் 07.00 மணியிருக்கும். நான் சம்பவநாள், சம்பவயிடத்திற்கு வரவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை –**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.11.06 18:26:28 +0530